DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**
PROSECUTION WITNESS No.8

Name : S.K.Kaariappan,

Father's Name : Kannaiyan,

Age :

Address :

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 11th day of September, 2025.

---

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது, வி3, ஜே, ஜே நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். முதலாவது எதிரி கே–7 ஐசிஎப் காவல் நிலைய குற்றப்பிரிபு ஆய்வாளராக பணிபுரிந்தார். 2வது எதிரி கே–7 ஐசிஎப் காவல் நிலைய குற்றப்பிரிவு காவலராக பணிபுரிந்தார். 3வது எதிரி கே–7 ஐசிஎப் காவல் நிலைய குற்றப்பிரிவில் காவலராக பணிபுரிந்தார். கடந்த 2010 முதல் 2013 வரை கே7, ஐசிஎப் காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்தேன். 11.01.2012 அன்று எனக்கு மதிய பணி, மதியம் 1 முதல் இரவு 9.00 வரை பணியாகும். சுமார் 8.45 மணயளவில் பேட்ரோல் வாகனத்தில் உதவி ஆய்வாளர் ஜானி செல்லப்பா அவர்களும், ஓட்டுநர் நடராஜன் அவர்களும் ஒருவரை அழைத்து வந்தார்கள், உதவி ஆய்வாளர்

ஜானி செல்லப்பா போனில் பேசிக் கொண்டிருந்தார், சட்டம் ஒழுங்கு ஆய்வாளரிடம் பேசியதாக சொன்னார்கள், கூட்டி வந்தவரை உள்ளே அழைத்து சென்றார்கள், நான் எனது பணியிலிருந்தேன், 9.00 மணிக்கு என்னை மாற்ற தலைமைக் காவலர் சேரன் அவர்கள் வந்தார்கள், அவர்களிடம் பாரா பொறுப்பை ஒப்படைத்து விட்டு கூட்டி வந்தவரிடம் பேசிக் கொண்டிருக்கிறார்கள், பார்த்து கொள்ளுங்கள் என்று சொன்னேன். பிறகு நான் ஓய்வெடுக்க சென்றுவிட்டேன், மறுநாள் காலை 7 மணிக்கு பணிக்கு திரும்பினேன். இரவு கூட்டி வந்தவர் பெயர் நித்யாராஜ், அவரை காவல் நிலையத்திற்கு முன்பு ஒரு செட் போல் இருக்கும், அங்கு உட்கார வைத்திருந்தார்கள். சேரனுக்கு பணிமாற்றிவிட்டு நான் பணியை எடுத்துக் கொண்டேன். சேரன் பணி மாற்றும்போது குற்றப்பிரிவில் நித்யராஜை வைத்திருக்கிறார்கள் என்று கூறினார், என்னிடமோ, சேரனிடமோ நித்யராஜை ஒப்படைக்கவில்லை, அவர்கள் பொறுப்பிலேயே வைத்துக் கொண்டார்கள். நித்யராஜ் நான் பார்க்கும்போது சோர்வாக இருந்தார். ஜோசப்பும், அண்ணாமலையும் நித்யராஜ் உடன் இருந்தார்கள். நான் என் வேலையை பார்க்க ஆரம்பித்தேன், நித்யராஜை அவருடன் இருந்தவர்கள் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு சென்றுவிட்டார்கள். அதன்பிறகு நான் பணியிலிருந்த போது அவர்கள் திரும்ப வரவில்லை.

**நீதிமன்ற கேள்வி எண்.1:**

12.01.2012 முதல் 14.01.2012 வரை நீங்கள் எந்தெந்த நேரங்களில் பாரா பொறுப்பில் இருந்தீர்கள்?

**பதில்:**

நான் 12.01.2012 அன்று காலை 7 மணி முதல் 1.00 மணி வரை பணியில் இருந்துவிட்டு சென்றுவிட்டேன், மீண்டும் 13.01.2012 அன்று இரவு 9 மணி முதல் காலை 7 மணி வரை பணியில் இருந்தேன்.

**நீதிமன்ற கேள்வி எண்.2:**

மேற்படி பணியில் நீங்கள் இருந்தபோது நித்யராஜ் நிலையத்தில் இருந்தாரா, யார் பொறுப்பில் இருந்தார்?

**பதில்:** 12.01.2012 அன்று காலை 7 மணி முதல் 13.00 மணிவரை நான் பாரா பொறுப்பிலிருந்த போது, நித்யராஜ் சிறப்பு உதவி ஆய்வாளர் அண்ணாமலை மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜோசப் ஆகியோர்கள் பொறுப்பிலிருந்தார். 13.01.2012 அன்று இரவு 9 மணி முதல் காலை 7 மணி வரை நான் பாரா பொறுப்பிலிருந்த போது, காவல் நிலையத்திற்கு யாரும் வரவில்லை, நித்யராஜும் வரவில்லை.

16.01.2012 அன்று புழல் சிறையிலிருந்து மருத்துவமனை செல்லும் வழியில் நித்யராஜ் இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக 26.10.2022 அன்று CBCID போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :--**

11.01.2012 அன்று உதவி ஆய்வாளர் ஜானி செல்லப்பா நித்யராஜை பாரா வசம் ஒப்படைத்ததாக சுற்றுக் காவல் விடுவிப்பு பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. நான் 11.01.2012 மற்றும் 12.01.2012 ஆகிய தேதிகளில் நித்யராஜை காவல் நிலையத்தில் பார்க்கவில்லை என்றாலும் CBCID போலீசார் பயமுறுத்தி அவ்வாறு சொல்ல சொன்னார்கள் என்றால் சரியல்ல. 11.01.2012 மற்றும் 12.01.2012 ஆகிய தேதிகளில் நித்யராஜை காவல் நிலையம் அழைத்து வந்திருந்தால் சட்டம் ஒழுங்கு பிரிவின் பதிவேடுகளில் அது பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால்

நீதிமன்ற காவலுக்கு அனுப்புவதாக இருந்தால் பதிவேடுகளில் பதிவு செய்வோம், Oral Enquiry க்கு அழைத்து வந்திருந்தால் அதை பொதுவாக பதிவு செய்ய மாட்டோம், ஜானி செல்லப்பா தான் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்திருக்க வேண்டும்.

<u>**மறுவிசாரணை**</u> :- இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**
PROSECUTION WITNESS No.7

| | |
|---|---|
| Name | : R.Joshep, |
| Father's Name | : V.Rajappan, |
| Age | : |
| Address | : |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 11th day of September, 2025.

---

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது கே–7 ஐசிஎப் காவல் நிலைய குற்றப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்றுள்ளேன். நான் தற்போது மாதவரத்தில் வசித்து வருகிறேன். முதலாவது எதிரி கே–7 ஐசிஎப் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்தார். 2 வது எதிரி கே–7 ஐசிஎப் காவல் நிலைய குற்றப்பிரிவு காவலராக பணிபுரிந்தார். 3 வது எதிரி கே–7 ஐசிஎப் காவல் நிலைய குற்றப்பிரிவில் காவலராக பணிபுரிந்தார். 12.01.2012 அன்று காலை 7 மணிக்கு காவல் நிலைய பணிக்கு சென்றேன். அப்போது நிலைய பாராவில் இருந்த சேரன் என்ற தலைமைக் காவலர்

செல்போன் திருடியதாக நித்தியராஜ் என்பவரை அழைத்து காவல் நிலையத்தில் உட்கார வைத்திருப்பதாக கூறினார். அப்போது ஆய்வாளர் அறையில் முதலாவது எதிரி ராமலிங்கம் குற்றப்பிரிவு ஆய்வாளர் அவர்கள் அமர்ந்திருந்தார் அவர் அருகில் நித்தியராஜ் அவர்கள் உட்கார வைக்கப்பட்டு இருந்தார். அவருக்கு பாதுகாப்பாக விஜயகுமார், ஆனந்த் வினோத் சிங் ஆகியோரர்கள் சேடோவாக இருந்தார்கள்.

காவல் ஆய்வாளர் அவர்கள் என்னையும் உதவி ஆய்வாளர் அண்ணாமலை அவர்களையும் அழைத்து அவர்கள் இருவரும் இரவு சேடோ பார்த்தார்கள் அவர்களை விடுவித்துவிட்டு இன்று நீங்கள் இருவரும் சேடோ பாருங்கள் என்று கூறினார். அவர்களை அனுப்பிவிட்டு நித்தியராஜை நாங்கள் பார்த்தபோது அவர் மிகவும்சோர்வாக இருந்தார். வலது கண் சிகப்பாக இருந்தது. லத்தியால் அடிக்கப்பட்ட காயங்கள் இரண்டு மூன்று முதுகில் இருந்தது. இரண்டு கைகளும் அசைவில்லாமல் இருந்தது. அன்று இரவு முழுவதும் அவருக்கு நாங்கள் சேடோ பார்த்தோம். 13.01.2012 அன்று மதியம் சுமார் 2 மணியளவில் காவல் ஆய்வாளர் ராமலிங்கம், அண்ணாமலை உதவி ஆய்வாளர் மற்றும் நான் ஆகியோரர்கள் நித்தியராஜை ஜீப்பில் ஏற்றி அவர் செல்போன் விற்ற இடத்திற்கு அழைத்து சென்றோம்.

அயனாவரம் வாட்டர் டேங்க் ரோடிலிருந்து ஒரு கடையில் செல்போனை கைப்பற்றினோம். அதன்பிறகு அங்கியிருந்து புறப்பட்டு அண்ணா நகர் ஆர்ச் அருகே உள்ள ஒரு கடையில் ஒரு செல்போன் கைப்பற்றினோம். மீண்டும் அவரை நிலையம் அழைத்துவந்து அவருக்கு நாங்கள் இருவரும் சேடோ பார்த்தோம். திரும்ப நிலையம் வந்தபோது இரவு மணி 8 இருக்கும். மறுநாள் காவல் ஆய்வாளர் ராமலிங்கம், நானும் உதவி ஆய்வாளர் அண்ணாமலை, டிரைவர் செல்வராஜ் ஆகியோர்கள் எழும்பூர் 5 வது பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு நித்தியராஜை நீதிமன்றக் காவலில் வைப்பதற்காக அழைத்துச் சென்றோம். நீதிமன்றக் காவலுக்கு உத்தரவு பெற்ற பிறகு காவல் ஆய்வாளர் ராமலிங்கம் அவர்கள் அண்ணாநகரில் உள்ள காந்திநகர் அரசு மருத்துமனையில் ஒரு OP சீட் பெற்றுக் கொண்டு செல்லாம் என்று கூறினார் நான் நித்தியராஜை மருத்துவரிடம் காண்பித்தபோது அவர் நித்தியராஜை கே.எம்.சி மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்படி கூறினார்.

கே.எம்.சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அப்போது மணி இரவு 7 இருக்கும். அங்கு மருத்துவர்கள் பரிந்துரைத்த மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டோம். அதன்பிறகு அவரை புழல் மத்திய சிறைக்கு அடைப்புக் காவலில் வைக்க அழைத்து சென்றோம். ஆய்வாளர்

மத்திய சிறையில் கைதிகளை அனுமதிப்பவரிடம் சென்று பேசினார். அந்த அதிகாரி ஆய்வாளரிடம் நித்தியராஜை ராயப்பேட்டை மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சைக்கு சேர்க்கும்படி கூறினார். நாங்கள் ஆய்வாளர் உத்தரவுப்படி அவரை ஜீப்பில் மீண்டும் ராயப்பேட்டை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு மருத்துவமனையில் மருத்துவர்கள் அனைத்து பரிசோதனைகளையும் செய்தார்கள். ஒரு பரிசோதனைக்காக ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு செல்லும்போது நடு இரவு ஆகிவிட்டது. அங்கு பரிசோதனை முடித்து மீண்டும் மத்திய புழல் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு சென்றபோது அவர்கள் உங்களை மருத்துவமனையில் அனுமதிக்கத்தானே சொன்னோம் மீண்டும் ஏன் அழைத்து வந்தீர்கள் அவரை மருத்துவ சிகிச்சைக்கு சேர்க்கும்படி கூறினரர்கள் நாங்கள் மீண்டும் ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அவரை அழைத்துச் சென்றோம். அப்போது மணி காலை 7 ஆகிவிட்டது.

அங்கு இரவுப்பணி மருத்துவர்கள் பணிமுடிந்து சென்று விட்டார்கள். காலைப் பணிக்கு வந்த மருத்துவர்கள் மீண்டும் முதலில் இருந்து பரிசோதனை செய்ய சொன்னார்கள். எல்லா மருத்துவ பரிசோதனை எடுத்தபின்பு மீண்டும் ஸ்கேன் எடுப்பதற்காக ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தார்கள். அப்போது 12 மணியளவில்

ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு ஸ்கேன் எடுத்துக் கொண்டு ஒப்பீனியன் வாங்குவதற்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு வந்தோம் அப்போது மணி மதியம் 3 இருக்கும். அதன்பிறகு மத்திய புழல்சிறைக்கு வந்தோம். இரவு 7 மணியளவில் அவரை சிறைக்குள் அனுமதித்தார்கள். அதன்பிறகு கே–7 ஐசிஎப் காவல் நிலையம் வந்து சேர்ந்தோம். மேற்படி நிகழ்வுகளின் போது காவல் ஆய்வாளர் ராமலிங்கம் எங்களுடன்தான் இருந்தார். அதன்பிறகு பணிமுடிந்து நாங்கள் ஓய்வுக்கு சென்றுவிட்டோம். 26.05.2022 அன்று திருவள்ளூர் நீதித்துறை நடுவர் எண்1 ல் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்மூலம் என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.3** 26.10.2022 அன்று சிபிசிஐடி காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார். நித்தியராஜ்க்கு ஏற்பட்ட காயம் யாரால் ஏற்பட்டது என்று என்னிடம் யாரும் சொல்லவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

என்னிடம் காட்டப்படும் **எ.சா.ஆ.2** ல் உள்ள கையெழுத்து சிறப்பு உதவி ஆய்வாளர் பிராகாஷ் என்பவருடையது என்றால் எனக்கு அது சரியாக தெரியவில்லை. **எ.சா.ஆ.2** ல் தினேஷ் என்பவர் நிலையம் வந்து புகார் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் புகார் கொடுத்தது சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. **எ.சா.ஆ.3** ல் நித்தியராஜை தினேஷ், சரளா, அசோகன், ஆகிய மூவரும் சேர்ந்து கையில் கட்டுடன்

ஆஜர்படுத்தியவரை கைது செய்ததாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். **எ.சா.ஆ.4 ல்** இரவுநேர சென்ட்ரி பணிப்பதிவேட்டில் பாரா எண்ட்ரி போட்ட பிறகுதான் நாங்கள் வெளியில் சென்றோம் என்றால் சரிதான். 14.01.2012 அன்று காலை 7 மணிக்கு சொத்து கைப்பற்றுவதற்காக நித்தியராஜை அழைத்து சென்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே தேதியில் காலை 11.30 மணிக்கு நாங்கள் சொத்தை கைப்பற்றி பாராவிடம் ஒப்படைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு ஒப்படைத்ததை பெற்றுக் கொண்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான்.

**எ.சா.ஆ.7 ல்** நித்தியராஜை நீதிமன்றக் காவலுக்கு எடுத்து செல்வதற்காக செய்யப்பட்ட குறிப்பின் எனது கையெழுத்துபோல் உள்ளது ஆனால் அது என்னுடைய கையெழுத்து அல்ல. அது என்னுடைய கையொப்பம்தான் என்றாலும் தற்போது குழப்பத்தில் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. 12.01.2012 அன்று நித்தியராஜை நான் காவல் நிலையத்தில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் பார்த்தது சம்மந்தமாக உதவி ஆணையரிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் நித்தியராஜை அழைத்துச் சென்ற அனைத்து மருத்துவமனைகளிலும் காலதாமதமாகத்தான் மருத்துவம் பார்த்தார்கள் என்றால் சரிதான். நான் சிபிசிஐடி போலீஸ் சொல்லிக் கொடுத்து முதல் விசாரணையில் பொய்யாக சில விவரங்களை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

நான் பொதுநாட்குறிப்பில் குறிப்புகள் செய்தது இல்லை நிலைய எழுத்தர்தான் செய்வார். அந்த சமயத்தில் நிலைய எழுத்தர் பிரகாஷ் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** :– இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |